# 1

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# ஒரு அறிமுகம்

*உலகம் இன்று, நாமகரணமற்ற கிறிஸ்தவத்தைப் பற்றி நடைமுறையில் ஒன்றுமே அறியாததாகவே உள்ளது. ஒரு நபர் கிறிஸ்தவராக மட்டும் இருக்க முடியும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதென்பது பலருக்குக் கடினமானதாக உள்ளது. ஒருவர், தாம் கிறிஸ்தவர் என்று உறுதிப்படுத்திய உடனே, அடுத்து வரும் கேள்வி, "நீங்கள் எந்த நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்தவர்?" என்பதுதான். ஒரு நபர் கிறிஸ்தவராயிருந்தது எந்த நாமகரணக் கூட்டத்தையும் சாராதவராக இருக்க முடியும் என்ற கருத்துக் கூடச் சில வேளைகளில் மறுக்கப்படுகின்றது. ஒருவர் தைரியமாகத் தாம் கிறிஸ்தவர் என்று உரிமைகோரி, எந்தவொரு நாமகரணக் கூட்டத்தின் இணைவையும் மறுதலித்தால், அவர்மீது (இன்னும்) ஒரு நாமகரணப் பெயர் திணிக்கப் படுகின்றது.*

*ஒருவேளை இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் பன்னிரெண்டு பேர், விசுவாசிகளின் ஒரு சபைக் குழுமமாக கூடி ஆராதித்து, ஊழியம் செய்து, ஏதாவது மற்றும் எல்லா நாமகரணக் கூட்டங்களுடனும் தங்களுக்கு ஐக்கியம் இல்லை என்று உரிமைகோருவதாக வைத்துக் கொள்வோம். அவர்கள் கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மட்டுமே என்றும், கிறிஸ்துவின் சபையில் மட்டுமே தாங்கள் உறுப்பினர்கள் என்றும் உரிமைகோரினார்கள் என்றால், எவ்வித விசாரணையும் இல்லாமல், தவிர்க்க முடியாத ஒரு விஷயம் நேரிடும்: அவர்கள் ஒரு நாமகரணக் கூட்டம் என்று பெயரிடப்படுவார்கள்.[1]*

*கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருப்பதென்பதும், சபை என்பது கிறிஸ்துவின் சபையாக மட்டுமே இருப்பது என்பதும் இயலாத விஷயம் என்று பலர் நினைக்கின்றார்கள். இப்படிப்பட்ட கனத்தையும் தனிச்சிறப்பையும் எருசலேமில் தேவனுடைய ஆவியானவரால் மனிதர்கள் பேசியபோது எவர் ஒருவரும் மறுத்திருக்க மாட்டார்கள் என்றே நான் யூகிக்கின்றேன். நடபடிகள் புத்தகத்தின் முதல் ஏழு அதிகாரங்கள், இந்த சபையின் நிறுவன அமைப்பு மற்றும் தொடக்க கால ஊழியம் ஆகியவற்றின் வரலாற்றைத் தருகின்றன. அது ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது, இருப்பினும் இந்த விசுவாசிகள் யாவரும் கிறிஸ்தவர் களாக மட்டுமே இருந்தார்கள். அவர்களில் ஒருவரும் நமது கர்த்தருடைய சீஷன் என்பதைத் தவிர அதிகமான ஏதொன்றையும் உரிமைகோரவில்லை. ஒவ்வொரு தனிநபரும் இரட்சிக்கப்பட்ட நிலையில், கர்த்தரால் சபையில் சேர்க்கப்பட்டார்கள் - எந்த சபையில்? இந்தக் கிறிஸ்தவர்கள் யாவரும் எந்த*

*நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர்? அவர்கள் சார்ந்திருக்கும்படி அவ்விதமான (நாமகரணக் கூட்டம்) எதுவும் அந்த வேளையில் இந்தப் பூமியில் இருந்ததில்லை.*

*எருசலேமில் ஆயிரக்கணக்கான மக்கள் கிறிஸ்துவின் சீஷர்களாகி, இரட்சிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு - அவர்களில் எவருமே, நாமகரணக் கூட்டம் ஒன்றைச் சேராதவராக, ''சபை''யை மட்டுமே சார்ந்தவர்களாய் இருந்திருந்தால் - இதே செயலை ஆயிரக்கணக் கான மக்கள் இன்றும் செய்து அதே சபையாக ஏன் இருக்க முடியாது? அவர்களைப் போலவே கிறிஸ்தவர்களாக மட்டும், சீஷர்களாக மட்டும், மற்றும் இரட்சிக்கப்பட்ட மக்களாக மட்டும் இருப்பதினால் உண்டாகும் ஈவுகள் நமக்கு மறுக்கப்பட வேண்டியது ஏன்? அவர்கள் இரட்சிக்கப்பட்டு, சீஷர்களாகவும் ''சபையின்'' உறுப்பினர்களாகவும் மட்டும் இருந்து, கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்து, தேவனுக்காக ஊழியம் செய்து ஆராதிக்க முடிந்தது என்றால், நான் ஏன் அதைச் செய்யக் கூடாது? என்னைத் தடை செய்வது எது? இந்த மக்கள் "சபையில்" சேர்த்துக் கொள்ளப்பட்டு, நமது கர்த்தருடைய அப்போஸ்தலர்களால் வழி நடத்தப்பட்டு இருந்தார்கள் என்றால், அவர்களைப் போலவே நாமும் இருப்பதென்பது நமக்குப் பாதுகாப்பானதும், முழுமையான பாதுகாப்பானதுமாய் இருப்ப தில்லையா? ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர்களுக்குள் உள்ள ஆவியானவரின் பரிசுத்தமான இந்த முன்மாதிரியை கண்டுகொள்ளாமல் விடுவது என்பது உண்மையில் மிகவும் அபாயகரமானதாக இருப்பதில்லையா? "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகின்றார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14).*

*தொடக்க காலச் சீஷர்களின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றத் தவறுதல் என்பது உறுதியாகவே, தேவனுடைய ஆவியானவரின் தலைமைத் துவத்தைப் பின்பற்றத் தவறுவதாகவும், தேவனுடைய ஆவியானவரைப் பின்பற்றத் தவறுதல் என்பது தேவனுடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளை களாயிருக்கத் தவறுவதாகவும் உள்ளது. நாம் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாய் இருப்பதற்குப் பரிசுத்த ஆவியானவரை முழுவதுமாய் பின்பற்றுவது என்பதே நமக்குள்ள ஒரே வழியாகும்; மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுதல் என்பது எந்த நாமகரணக் கூட்டத்தையும் சாராமல், சீஷர்களாக மட்டும், கிறிஸ்தவர்களாக மட்டும், இரட்சிக்கப் பட்டு, நாம் இரட்சிக்கப்பட்டதால் அவருடைய சபையில் சேர்க்கப் பட்டவர்களாகவும் இருத்தல் என்பதாகவே உள்ளது.*

*நமது கர்த்தருடைய அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் மூலமாக அவரால் இவ்வுலகிற்கு அருளப்பட்ட மதம் போதுமான அளவுக்கு நல்லதாய் இருப்பதில்லையா? அது போதுமான அளவுக்குத் தூய்மை யானதாக இருப்பதில்லையா? அதில் நாம் ஏதேனும் முன்னேற்றங்களைச் செய்வதற்குத் துணிவோமா?*

*ஒருவேளை, ஒருவர் நமது கர்த்தருடைய புதிய ஏற்பாட்டை எடுத்து அதைப் படித்து, அதன் கிறிஸ்துவுக்குத் தம்மை மனப்பூர்வமாக ஒப்புவித்து, இந்தக் கர்த்தரின் கட்டளைகளுக்குத் தமது இருதயத்திலிருந்து*

*கீழ்ப்படிகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர், புதிய ஏற்பாட்டின் கிறிஸ்துவானவர் தமக்குப் போதிக்கின்றவற்றைச் செய்து அவருடன் நிலைநிற்க இடையறாது முயற்சி செய்வார் என்றால் - மற்றும் அவர், கிறிஸ்து தம்மை வழி நடத்துகின்றவற்றைத் தவிர மற்ற வகையில் இருப்பதற்கோ மற்றவற்றைச் செய்வதற்கோ மறுப்பார் என்றால் - அவர் என்னவாக ஆவார் மற்றும் எப்படியிருப்பார்? உறுதியாகவே அவர் கிறிஸ்துவின் சீஷராயிருப்பார், நிச்சயமாகவே இரட்சிப்பைக் கண்டடைவார் மற்றும் அவர் உறுதியாகவே "சபைக்குள்" சேர்க்கப்படுவார். உண்மையில் அவர் எருசலேமில் இருந்த சீஷர்களைப் போலவே பெரும்பாலும் இருப்பார்.*

*இப்பொழுது, ஒருவேளை இவ்விதமான மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு நூறு பேர் ஒரு நகரில் உள்ளனர் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் ஒரு சபைக் குழுமமாக தேவனை ஆராதிக்க ஒன்றுகூடினால், அவர்கள் இயேசுவைத் தவிர வேறு கர்த்தரை அறியாதவர்களாய் மற்றும் அவர்கள் இரட்சிக்கப் பட்ட வகையில் கர்த்தர் அவர்களைச் சேர்த்துக் கொண்ட சபையைத் தவிர வேறு சபையெதையும் அறியாதவர்களாயிருந்தால், அந்த நகரில் இந்த நூறு பேர் எந்த சபையில் (உறுப்பினர்களாய்) இருப்பார்கள்? அவர்கள் எந்த நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பார்கள்? நிச்சயமாக அவர்கள் எந்த நாமகரணக் கூட்டத்திலும் இருக்க மாட்டார்கள்; அவர்கள் கிறிஸ்துவால் நிலைநாட்டப்பட்ட சபையில் மட்டுமே இருப்பார்கள்.*

---

*குறிப்பு*

*[1]பதிப்பாளரின் குறிப்பில் காணவும்.*

---

## *பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள்*

*"பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என்று கூறினார்.*